விடியல் பயிற்சி மையம்
வேலூர்
செல் : 9092997509, 9487640063, 8122706441
www.vidiyalarni.blogspot.in

## TENTATIVE ANSWER KEYS FOR TRB PG ASSISTANTS EXAM HELD ON 21.07.2013

## TAMIL

1. தாண்டகவேந்தர் என்றழைக்கப் பெறுபவர் யார்?
   A) திருநாவுக்கரசர் B) திருஞானசம்பந்தர்
   C) மாணிக்கவாசகர் D) சுந்தரர்
2. சைவத் திருமுறைகளுள் முதல் மூன்று திருமுறைகளின் ஆசிரியர் யார்?
   A) திருநாவுக்கரசர் B) மாணிக்கவாசகர்
   C) திருஞானசம்பந்தர் D) சுந்தரர்
3. பன்னிரு ஆழ்வார்களுள் கடவுளைப் பாடாது அடியாராம் நம்மாழ்வாரைப் பாடியது யார்?
   A) மதுரகவி ஆழ்வார் B) திருமங்கை ஆழ்வார்
   C) ஆண்டாள் D) திருப்பாணாழ்வார்
4. தஞ்சை வாணன் கோவையின் ஆசிரியர் பெயர் தருக
   A) பொய்யா மொழிப் புலவர் B) பொய்கையார்
   C) சேக்கிழார் D) ஒட்டக்கூத்தர்
5. திருமந்திரத்தின் உட்பிரிவாக எத்தனைத் தந்திரங்கள் இடம் பெற்றுள்ளன?
   A) 7 B) 8 C) 9 D) 6
6. ஒலியை ஆராயும் முறையை எத்தனை பிரிவாக வகுக்கின்றனர்?
   A) இரண்டு B) நான்கு C) மூன்று D) ஆறு
7. அரேபியா, எகிப்து போன்ற பகுதிகளில் பேசப்படும் மொழியினம்
   A) அன்னாமியினம் B) உலாப் இனம்
   C) நீக்ரோ இனம் D) செமிட்டிக் இனம்
8. குவிமொழி எந்த மாநிலத்தில் பேசப்படுகிறது?
   A) ஒரிசா B) மத்தியப்பிரதேசம்
   C) பீகார் D) மைசூர்
9. திராவிட மொழிகளிலுள்ள திணை பால் பாகுபாடு சிறந்தது என்று கூறியவர்?
   A) வீரமாமுனிவர் B) குண்டர்ட்
   C) கால்டுவெல் D) எமனோ

10. 'தமிழ்மொழி பெருமை மிக்க பழைய வரலாறு உடையதாகும்' என்று கூறியவர் ?

A) தீட்சதர் B) தெ.பொ.மீ **C) ஹீராஸ்** D) சாட்டர்ஜி

11. "சொற்களைச் சிறந்த முறையில் வைப்பதே வசனம் சிறந்த சொற்களைச் சிறந்த முறையில் வைப்பதே கவிதை" என்று கூறியவர்?

A) ஷெல்லி B) டி.எஸ்.எலியட் **C) கோல்ரிட்ஜ்** D) கீட்ஸ்

12. ஒவ்வொரு சொல்லையும் சுண்டிப் பார்த்து ஓசைநயம் செவ்வனே உள்ளதா என்று ஆராய்ந்து பயன்படுத்தும் கதை ஆசிரியர்?

**A) கல்கி** B) அகிலன் C) சுஜாதா D) லா.ச.ராமாமிர்தம்

13. நிஜ நாடக இயக்கம் நிகழ்ச்சிய நவீன நாடகம்?

A) பலூன் B) துர்க்கிர அவலம்

C) ஊர்வலம் **D) பலி ஆடுகள்**

14. தொல்காப்பியத்தில் 'ஆய்தல்' என்ற சொல்லுக்குக் கூறப்படும் பொருள்?

**A) உள்ளதன் நுணுக்கம்** B) நுட்பமாய் அறிதல்

C) தேடுதல் D) கூர்ந்து கவனித்து அறிந்து கொள்ளுதல்

15. அர்த்தங்கள் மையம் இழந்தவை, நிலையற்றவை; ஒத்தி வைப்புக்குள்ளானவை என விளக்கிய கோட்பாடு?

**A) பின் நவீனத்துவம்** B) பின் காலனியம்

C) நவீனத்துவம் D) பின் அமைப்பியல்

16. ஆதி நிகண்டு என அழைக்கப் பெறுவது எது?

A) சூடாமணி நிகண்டு B) பிங்கல நிகண்டு

**C) திவாகர நிகண்டு** **D) சேந்தன் திவாகரம்**

17. கம்பராமாணம் நூலுக்குக் கம்பர் சூட்டிய பெயர் யாது?

**A) இராமாவதாரம்** B) கம்பராமாணயம்

C) கம்பநாடகம் D) கம்பநாட்டான் கதை

18. வினா - விடை வடிவில் அமைந்த இஸ்லாமிய இலக்கியம் எது

A) கிஸ்ஸா B) நாமா

C) பல்சந்தமாலை **D) மசாலா**

19. உடம்பால் அழியின் உயிரால் அழிவர் - யாருடைய கூற்று?

A) திரவாதவூரர் B) அப்பர்

**C) திருமூலர்** D) சம்பந்தர்

20. விக்கிரம சோழன் உலாவின் ஆசிரியர் யார்?

**A) ஒட்டக்கூத்தர்** B) தரணி முழுதுடையான்

C) ஞானதேவன் D) தேரியன் மாதேவி

21. ஆற்றுப் படைகளில் அடியளவில் பெரிய நூல் எது?

A) திருமுருகாற்றுப்படை B) சிறுபாணாற்றுப்படை

**C) மலைபடு கடாம்** D) பெரும்பாணாற்றுப்படை

22. வஞ்சி நெடும்பாட்டு என வழங்கப் பெறும் நூல் எது?

A) மதுரைக் காஞ்சி **B) பட்டினப்பாலை**

C) முல்லைப்பாட்டு D) குறிஞ்சிப்பாட்டு

23. வடக்கிருந்து உயர் நீத்த சோழ மன்னன் யார்?

A) கரிகால் சோழன் B) இராஜராஜ சோழன் C) கோச்செங்கணான் **D) கோப்பெருஞ் சோழன்**

24. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க?

A) குறிஞ்சிக் கலி - இளநாகனார்

B) முல்லை கலி - கபிலர்

C) மருதக் கலி - நல்லுருத்திரன்

**D) பாலைக் கலி - பெருங்கடுங்கோ**

25. நக்கீரர் பத்துப் பாட்டில் பாடிய நூல்கள்?

A) நெடுநல்வாடை, மதுரைக் காஞ்சி **B) திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை**

C) திருமுருகாற்றுப்படை, மதுரைக் காஞ்சி D) நெடுநல்வாடை, பட்டினப்பாலை

26. தமிழ் உரைநடையின் தந்தை என்று அழைக்கப்படுபவர்?

A) சீகன் பால்கு ஐயர் B) ஜீ.யு.போப் **C) வீரமாமுனிவர்** D) தனிமைப்படுத்துதல்

27. பாரதியாரின் சின்ன சங்கரன் கதை என்னும் நூல்?

**A) கதைக் கவிதை** B) உரைநடை நூல் C) குறுங்காவியம் D) சுயசரிதம்

28. வரலாற்று கலஞ்சியம் என்று யாருடைய நாட்குறிப்பை குறிப்பிடுவர்?

**A) ஆனந்தரங்கம் பிள்ளை** B) சி.வை. தாமோதரம் பிள்ளை

C) கதிரைவேற் பிள்ளை D) அ. குமாரசாமிப் பிள்ளை

29. 'காட்டு வாத்து' தொகுப்பினை வெளியிட்ட பதிப்பகம்

A) கசடதபற B) மணிக்கொடி **C) எழுத்து** D) வானம்பாடி

30. உ.வே. சாமிநாதையர் முதன் முதலில் பதிப்பித்த நூல்

A) சிலப்பதிகாரம் B) மணிமேகலை **C) சீவக சிந்தாமணி** D) பெருங்கதை

31. கவிதை இலக்கியங்களுள் பேரிலக்கியமாகத் திகழ்வது

**A) காப்பியம்** B) அற இலக்கியம் C) பக்தி இலக்கியம் D) சிற்றிலக்கியம்

32. மணநூல் என்று அழைக்கப்படுவது

A) சிலப்பதிகாரம் B) மணிமேகலை C) வளையாபதி **D) சீவகசிந்தாமணி**

33. "அடிகள் நீரே அருள்க" என்ற கூற்றுக்கு உரியவர்

A) கோவலன் B) மாடலன் **C) சாத்தனார்** D) இளங்கோவடிகள்

விடியல் வேலூர்

34. மணிமேகலையால் யானைத் தீ பசிநோய் தீர்க்கப்பட்டவள்

A) ஆதிரை B) கதமதி

C) சித்திராபதி **D) காய சண்டிகை**

35. குண்டலக்கேசிக்கு எதிராகத் தோன்றிய வாத நூல்

**A) நீலகேசி** B) வளையாபதி

C) உதயன குமார காவியம் D) சூளாமணி

36. உழவர்களின் வாழ்வியலைக் கூறும் சிற்றிலக்கியம் எது?

**A) பள்ளு** B) உலா C) கலம்பகம் D) தூது

37. பிள்ளைத் தமிழில் முதலாவதாக எப்பருவம் அமைகிறது?

A) முத்தப் பருவம் B) அம்புலிப் பருவம்

**C) காப்புப் பருவம்** D) தாலப் பருவம்

38. முதலாழ்வார்களின் எண்ணிக்கை யாது?

A) 5 B) 6 C) 7 **D) 3**

39. 'கொல்லா விரதம் குவலயமெல்லா மோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை பராபரமே' என்று உரைத்தவர் யார்?

**A) தாயுமானவர்** B) பட்டினத்தார் C) வள்ளலார் D) திருமூலர்

40. குற்றலாக் குறவஞ்சியின் ஆசிரியர் பெயர் தருக.

A) ஜெய்டகொண்டார் B) ஒட்டக்கூத்தர்

**C) திரிகூடராசப்பக் கவிராயர்** D) குற்றாலநாதர்

41. "குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்" என மான உணர்ச்சி மிகுந்த பாடலைப் பாடிய மன்னர் யார்?

**A) சேரமான் கணைக்கால இரும்பொறை** B) கிள்ளிவளவன்

C) பாண்டியன் அறிவுடைநம்பி D) நலங்கிள்ளி

42. "பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" எனப் பாடியவர் யார்?

A) ஔவையார் B) உலோச்சனார்

**C) கணியன் பூங்குன்றனார்** D) பரணர்

43. உவமையால் பெயர் பெற்ற புலவர்

A) ஓதலாந்தையார் **B) கல்பொருசிறு நுரையார்**

C) வன்பரணர் D) அம்மூவனார்

44. கோப்பெருஞ்சோழனோடு பிசிராந்தையாரைப் போல் நட்பு கொண்ட மற்றொரு புலவர் யார்?

**A) பொத்தியார்** B) கபிலர்

C) தொல்கபிலர் D) பெருஞ்சித்திரனார்

45. “எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே” எனப் பாடிய புலவர் யார்?

A) பாரி மகளிர் B) பெருங்கோப் பெண்டு

C) வெள்ளி வீதியார் **D) ஔவையார்**

46. கி.பி. 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6 ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலம்

**A) நீதி நூல் காலம்** B) பக்தி இலக்கிய காலம்

C) சிற்றிலக்கிய காலம் D) நாடக இலக்கிய காலம்

47. காப்பிய விதிகள் பற்றி குறிப்பிடும் இலக்கண நூல்

**A) தண்டியலங்காரம்** B) யாப்பெருங்கலக்காரிகை

C) நன்னூல் D) தொல்காப்பியம்

48. உலக நிலையாமையை எடுத்துக்காட்டும் நீதிநூல்

A) திரிகடுகம் B) ஆசாரக்கோவை C) ஏலாதி **D) முதுமொழிக்காஞ்சி**

49. இலத்தீன் மொழியில் திருக்குறளை மொழி பெயர்த்தவர்

A) இராஜாஜி B) ஜி.யு. போப் **C) வீரமாமுனிவர்** D) வ.வே.சு. ஐயர்

50. புகார் காண்டத்தின் இறுதி காதை:

**A) நாடுகாண் காதை** B) காடுகாண் காதை

C) கொலைக்களக் காதை D) வரம் தரு காதை

51. “மதுரையை தென் தமிழ் மதுரை” எனக் குறிப்பிடும் நூல்:

A) சிலப்பதிகாரம் **B) மணிமேகலை**

C) வளையாபதி D) குண்டலகேசி

52. பதினெண் கீழ்க்கணக்கில் இடம் பெறும் அகநூல்கள்:

A) 4 B) 5 **C) 6** D) 7

53. சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதை இடம் பெறும் நூல்

A) சிலப்பதிகாரம் **B) மணிமேகலை**

C) சீவக சிந்தாமணி D) குண்டலகேசி

54. வைரவியாபாரி இடம் பெறும் காப்பியம்

A) மணிமேகலை B) சீவக சிந்தாமணி

**C) வளையாபதி** D) சிலப்பதிகாரம்

55. “பாளையாம் தன்மை செத்தும் பாலனாம் தன்மை செத்தும்” என்ற வரிகள் இடம் பெறும் நூல்:

A) சிலப்பதிகாரம் B) மணிமேகலை

C) வளையாபதி **D) குண்டலகேசி**

56. வைகரை, விடியல்:

A) முல்லைத் திணைக்குரியகாலம் B) குறிஞ்சித் திணைக்குரிய காலம்

**C) மருதத் திணைக்குரிய காலம்** D) நெய்தல் திணைக்குரிய காலம்

57. ‘இருத்தலின்’ உரிப் பொருளுக்குரிய திணை:

A) குறிஞ்சித் திணை B) நெய்தல் திணை

C) முல்லைத் திணை D) மருதத் திணை

58. மருத நில தலைமக்கட் பெயர்

A) ஊரன் மகிழ்நன் B) சேர்ப்பன் துறைவன்

C) மீளி, விடலை D) மலைநாடன், வெற்பன்

59. முல்லைத்திணைக்குரிய தெய்வம்

A) இந்திரன் B) கண்ணன் C) கொற்றவை D) வருணன்

60. மருதத் திணைக்குரிய பூ

A) காந்தள் பூ B) மராம் பூ C) தாமரை D) நெய்தல் பூ

61. ‘போர்க்குறிக்காயமே புகழின் காயம்

யார்க்கது வாய்க்கும்! ஆ! நோக்குமின்!’

A) குடிலன் B) நடராசன் C) சீவக வழுதி D) நாராயணன்

62. ‘பவளக்கொடி’ நாடக ஆசிரியர்

A) பரிதிமாற் கலைஞர் B) பம்மல் சம்பந்த முதலியார்

C) டி.கே. சண்முகம் D) சங்கரதாஸ் சுவாமிகள்

63. ‘தமிழ் நாடகத் தந்தை’ எனப் போற்றப்படுபவர்:

A) பெ. சுந்தரம்பிள்ளை B) பம்மல் சம்பந்த முதலியார்

C) பரிதிமாற் கலைஞர் D) இராசமாணிக்கம்

64. ‘வாசகர்தான் பனுவலுக்கான அர்த்தங்களை வெளிக் கொணர்கிறார்’ என்று கூறும் கோட்பாடு

A) சோசலிச எதார்த்தவாதம் B) பின் காலனியம்

C) பின் நவீனத்துவம் D) அமைப்பியல்

65. ‘சிட்டுக்குருவி எனது பலகணியின் வழியே வரின் யான் என்னை மறந்து சிட்டாகவே மாறி விடுகிறேன்’ என்று கூறிய கவிஞர்

A) ஷெல்லி B) கீட்ஸ் C) காட்டே ரூஸ் D) டி.எஸ். எலியட்

66. பெரும் பொழுதின் வகைகள்

A) ஐந்து வகைப்படும் B) ஆறு வகைப்படும்

C) எட்டு வகைப்படும் D) மூன்று வகைப்படும்

67. ‘மல்குகார்மாலை’

A) நெய்தற்கு உரித்தே B) மருதத்திற்கு உரித்தே

C) முல்லைக்கு உரித்தே D) குறிஞ்சிக்கு உரித்தே

68. முல்லைத் திணைப் பறை:

A) தொண்டகப் பறை B) துடி C) கோட் பறை D) ஏற்றுப் பறை

69. அகப்பொருள் மெய்யுறு புணர்ச்சியின் உட்பிரிவுகள்:

A) ஏழு வகைப்படும் **B) பத்து வகைப்படும்**

C) பன்னிரண்டு வகைப்படும் D) ஆறு வகைப்படும்

70. களவிற்குரிய கிளவித் தொகைகள்

**A) பதினேழு கிளவித் தொகைகள்** B) பதினைந்து கிளவித் தொகைகள்

C) பத்து கிளவித் தொகைகள் D) பதினெட்டு கிளவித் தொகைகள்

71. புறப்பொருள் வெட்சிப் படலத்தில் ‘உண்டாட்டு’ எனப்படுவது

A) எதிர்த்துப் போரிடுவது B) பகைவர் அரண்களைக் காப்பது

**C) கள் அருந்திக் களிப்பது** D) ஆநிரைகளைப் பகிர்ந்து வழங்கல்

72. வெட்சிப் படலத்தில் ‘துடிநிலை’ என்று கூறப்படுவது

**A) குடிப்பழமையைப் புகழ்தல்** B) கொற்றவையைப் புகழ்தல்

C) மன்னரைப் புகழ்தல் D) வீரர்களைப் புகழ்தல்

73. கரந்தைப் பூ, பூக்கும் காலம்

**A) மாசி, பங்குனி** B) சித்திரை, வைகாசி

C) ஐப்பசி, கார்த்திகை D) மார்கழி, தை

74. வஞ்சி மறவரின் போர்த்தொழிலைச் சிறப்பித்துக் கூறும் துறை:

A) குடிநிலை B) வாள்நிலை C) குடைநிலை **D) கொற்றவை நிலை**

75. ‘வட்கார் மேல் செல்வது’

A) காஞ்சித் திணை B) வெட்சித் திணை C) கரந்தைத் திணை **D) வஞ்சித் திணை**

76. ‘அவர் வந்தார்’ என ஒருவரை மட்டும் குறிப்பது

A) திணை வழுவமைதி **B) பால் வழுவமைதி**

C) இட வழுவமைதி D) எண் வழுவமைதி

77. ‘துஞ்சினார்’ என்று செத்தாரைக் குறிப்பது

**A) மங்கல வழக்கு** B) இடக்கரடக்கல் C) ஆகுபெயர் D) குழூஉக் குறி

78. ‘அண்ணாக் கயிறு’ என்பது

A) அண்ணனுக்குக் கட்டும் கயிறு B) அர்ணாக்கொடி

**C) அரைஞான் கயிறு** D) தாம்புக் கயிறு

79. தமிழிலிருந்து ஆங்கிலத்துக்குக் கடன் வாங்கப் பெற்ற சொற்கள்

A) ஓலை, கறி, காசு, தேக்கு B) மயில், மாலை, பழம், ஏலம்

C) குடி, கூலி, பெருமகள், கல் **D) அரிசி, இஞ்சி, கருவா (பட்டை),தோகை**

80. ‘Bicycle’ என்பதன் கலைச் சொல்லாக்கம்

A) சைக்கிள் B) துவி சக்கர வாகனம்

**C) ஈருருளி** D) மிதிவண்டி

81. உவமை தோன்றும் நிலைக்களன்

A) பகை **B) காதல்** C) விளையாட்டு D) வினை

82. பொறி நுதல் வியர்த்தல்

A) இரண்டாம் நிலை மெய்ப்பாடு B) மூன்றாம் நிலை மெய்ப்பாடு

**C) முதல்நிலை மெய்ப்பாடு** D) ஆறாம் நிலை மெய்ப்பாடு

83. உவமப் போலி

A) நான்கு B) மூன்று C) இரண்டு **D) ஐந்து**

84. உள்ளுறை உவமத்தின் பயன்

**A) சுவை** B) கற்பனை C) வடிவம் D) உணர்ச்சி

85. 'தளிர் அடிமென் நகை மயிலைத் தாது அவிழ்தார்க் காளைக்கு' இவ்வடிகளில் அமைந்து உள்ளது

A) உவமை **B) அடைமொழி** C) உள்ளுறை D) இறைச்சி

86. ஒலி வடிவிலும் வரி வடிவிலும் அமைந்த எழுத்துக்களின் தனித்தன்மையை விளக்குவது

**A) மொழி மரபு** B) தொகை மரபு C) நூன் மரபு D) பிறப்பியல்

87. சகாரஞகாரம் பிறப்பு

A) நுனிநா அண்ணம் **B) இடைநா அண்ணம்**

C) முதல்நா அண்ணம் D) கடைநா அண்ணம்

88. கி.பி. 17ஆம் நூற்றாண்டில் எழுந்த சொல்லிலக்கண நூல்

**A) பிரயோக விவேகம்** B) நேமிநாதம்

C) முத்துவீரியம் D) தமிழ்நெறி விளக்கம்

89. 'சொல்லும் பொருளும்' ஒரு தாளின் இரண்டு பக்கம் போன்றது' என்று கூறியவர்

A) கால்டுவெல் B) டிசசூர் C) சோம்ஸ்கி D) சீகன் பால்கு

90. யாப்பிலக்கணக் 'கலைக் களஞ்சியம்' என அழைக்கப்படுவது

**A) யாப்பருங்கலக்காரிகை** B) யாப்பருங்கலம்

C) யாப்பருங்கல விருத்தியுரை D) இலக்கண விளக்கம்

91. கட்டளைக் கலித்துறையில் அமைந்த யாப்பு நூல்

A) இலக்கண விளக்கம் B) யாப்பருங்கலம்

C) யாப்பருங்கலவிருத்தியுரை **D) யாப்பருங்கலக் காரிகை**

92. அணியிலக்கணம் கூறும் நூல்களுள் முதன்மையானது

**A) தண்டியலங்காரம்** B) மாறனலங்காரம்

C) இந்திர காளியம் D) மாறனகப் பொருள்

93. தண்டியலங்கார பொருளணியியலில் தன்மையணி முதல் பாவிக அணி வரை உள்ள மொத்த அணிகள்

A) 25 அணிகள் B) 27 அணிகள் **C) 35 அணிகள்** D) 37 அணிகள்

94. ‘தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு’ இதில் இடம் பெறும் அணி

A) உவமையணி

**B) வேற்றுமையணி**

C) அதிசிய வணி

D) சிலேடை அணி

95. ஐந்திலக்கணம் கூறும் முதல் இலக்கண நூல்

**A) வீரசோழியம்**

B) முத்துவீரியம்

C) நேமிநாதம்

D) பிரயோக விவேகம்

96. மூன்றாம் தமிழ்ச் சங்கம் இருந்ததாகக் கருதப்படும் இடம் எது?

A) கபாடபுரம் **B) மதுரை** C) காஞ்சிபுரம் D) கரந்தை

97. ஐங்குறுநூற்றின் ‘கடவுள் வாழ்த்தைப்’ பாடியவர் யார்?

A) பூரிக்கோ

B) பாண்டியன் மாறன் வழுதி

**C) பெருந்தேவனார்**

D) உருத்திரசன்மனார்

98. பொருநராற்றுப்படை எம்மன்னனின் சிறப்பைப் பாடுகிறது?

**A) கரிகால் சோழன்**

B) இளந்திரையன்

C) பாண்டியன் நெடுஞ்செழியன்

D) நல்லியக் கோடன்

99. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க

A) இரண்டாம் பத்து - பல்யானை செல்குழு குட்டுவன்

B) மூன்றாம் பத்து - களங்காய் கண்ணி நார் முடிச்சேரன்

C) நான்காம் பத்து - இமயவரம்பன் நெடுஞ் சேரலாதான்

**D) ஐந்தாம் பத்து - கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்**

100. “ஆன்றோர் புகழ்ந்த அறிவினிற் றெரிந்து
சான்றோரு ரைத்த தண்டமிழ்த் தெரியல் ஒருபது பாட்டும்” எனக் கூறியவர் யார்?

**A) நச்சினார்க்கினியர்**

B) பேராசிரியர்

C) அடியார்க்கு நல்லார்

D) இளம் பூரணர்

101. தமிழ்மொழியை உயர்தனிச்செம்மொழி என்று முதன்முதலில் கூறியவர்

A) மறைமலை அடிகள்

B) திரு.வி. கல்யாண சுந்தரம்

**C) பரிதிமாற் கலைஞர்**

D) எஸ். வையாபுரிப் பிள்ளை

102. தொல்காப்பியர் சுட்டும் உரசொலிகள்

A) ல,ள B) ப,ம C) ச,ஞ **D) ர,ழ**

103. என் என்னும் சொல் யார் காலத்தில் அன் என்று மாறியது?

A) பல்லவர் **B) பாண்டியர்** C) சேரர் D) சோழர்

104. முதன் முதலாகத் “தமிழன்” என்ற சொல்லாட்சி காணப்படும் இலக்கியம்

A) சம்பந்தர் தேவாரத்தில்

B) திருமந்திரத்தில்

**C) அப்பர் தேவாரத்தில்**

D) திருவாசகத்தில்

விடியல் செல்வா

105. எந்த அளபெடை சோழர் காலத் தமிழில் காரணவினை காட்டும் உருபாக இருந்தது?

**A) இகரம்** B) உகரம் C) அகரம் D) எகரம்

106. 'ஞானபீட விருது பெற்ற' புதினம்

A) அகல் விளக்கு B) அலை ஓசை

C) வேங்கையின் மைந்தன் **D) சித்திரப்பாவை**

107. வா.செ. குழந்தைசாமியின் சாகித்ய அகாடமி விருது பெற்ற திறனாய்வு நூல்

A) திருக்குறள் நீதி இலக்கியம் **B) வாழும் வள்ளுவம்**

C) பாரதி காலமும் கருத்தும் D) கம்பன் புதிய பார்வை

108. ஏறுதழுவுதலை கதைக்களமாகக் கொண்ட புதினம்

A) வளைக்கரம் B) அழுக்குகள்

**C) வாடிவாசல்** D) கல்லும் மண்ணும்

109. 'குடும்பத்தேர்' சிறு கதையின் ஆசிரியர்

A) ஆதவன் B) பூமணி C) நகுலன் **D) மௌனி**

110. பட்டியல் - I ஐ பட்டியல் - II உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறினடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு:

| பட்டியல் - I | பட்டியல் - II |
|---|---|
| (a) வித்தன் | (i) - கமலாவின் கல்யாணம் |
| (b) கு. அழகிரிசாமி | (ii) - அக்பர் சாஸ்திரி |
| (c) கல்கி | (iii) - மவராசர்கள் |
| (d) தி. ஜானகிராமன் | (iv) - திரிபுரம் |

குறியீடுகள்:

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | (iv) | (iii) | (ii) | (i) |
| **B)** | **(iii)** | **(iv)** | **(i)** | **(ii)** |
| C) | (ii) | (iv) | (i) | (iii) |
| D) | (iii) | (ii) | (iv) | (i) |

விடியல் ஆரணி

**குறிப்பு :**

இங்கு வெளியிடப்பட்டுள்ள விடைகள் விடியல் பயிற்றுநர் குழுவின் கணிப்பே. TRB - ஆல் வெளியிடப்படும் விடைகளே முடிவானவையாகும். எனினும் மேற்கண்ட விடைகளின் அடிப்படையில் உங்களின் சரியான விடைகளின் எண்ணிக்கையினை உங்கள் பெயர், ஊர் (ம) இட ஒதுக்கீட்டுப் பிரிவுடன் இந்த எண்ணுக்கு SMS செய்யவும். **9092997509**. அதன் அடிப்படையில் **வரலாறு மற்றும் தமிழ் பாடங்களுக்கு** இரண்டு நாட்களுக்குப் பின்னர் எதிர்பார்க்கப்படும் **CUT-OFF** விவரங்கள் இதே இணையதளத்தில் வெளியிடப்படும்.